IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE
(FAST TRACK COURT), VELLORE, VELLORE DISTRICT.
DEPOSITION OF WITNESS

S.C.NO.44/2025

Deposition of Witness for P.W.6

| | | |
|---|---|---|
| NAME | - | திரு.ஆசீர் தங்கராஜ் |
| FATHER NAME | - | துரை ராஜ் |
| VILLAGE | - | |
| TALUK | - | |
| OCCUPATION | - | கிராம நிர்வாக அலுவலர் |
| AGE | - | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 21.01.2026.

4ம் எதிரி நீதிமன்ற காவல். மற்ற எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர்.

<u>முதல் விசாரணை-</u>

நான் தற்போது செம்புராயநல்லூரில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிகிறேன். 2016 வருடம் அம்முண்டி கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணியிலிருந்தபோது திருவலம் கிராமத்தில் கூடுதலாக பொறுப்பு வகித்தேன். 04.11.2016 காலை 08.00 மணிக்கு திருவலம் போலீசார் அழைத்ததன் பேரில் திருவலம் காவல் நிலையத்திற்கு நானும் என்னுடைய உதவியாளர் குமாரும் காவல் நிலையத்திற்கு சென்றோம். 2ம் எதிரி ஜானி (எ) ஜான் பால்ராஜை போலீசார் விசாரணை செய்து கொண்டிருந்தார்கள். ஆஜர் எதிரிகளில் இரண்டாவதாக நிற்பவர் ஜானி என சாட்சி தவறாக அடையாளம் காண்பிக்கிறார். போலீசார் விசாரணையில் எதிரி ஜானி ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் அதை போலீசார் எங்கள் முன்னிலையில் தட்டச்சு செய்தார்கள் அதில் நானும் உதவியாளரும் கையெழுத்து செய்தோம்.

என்னிடம் காண்பிக்கப்படும் 2ம் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள முதல் கையெழுத்து என்னுடையது அது அ.த.சா.ஆ.4. உதவியாளர் அதில் இரண்டாவது கையெழுத்து செய்தார். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>குறுக்கு விசாரணை-</u>

நான் எந்த மாதம் தேதி வருடம் 14.04.2016 ல் நான் கிராம நிர்வாக அலுவலராக அம்முண்டியில் பணியில் சேர்ந்தேன். திருவலம் கிராம நிர்வாக அலுவலகத்தில் இருக்கும்போது போலீசார் சாட்சியாக இருக்குமாறு என்னை அழைத்தார்கள். எனது அலுவலகத்திலிருந்து காவல் நிலையத்திற்கு 5 நிமிடத்தில் சென்றுவிடலாம். காவல் நிலையத்தின் பிரதான அறையில் ஒரு ஓரமாக இருந்தார். சாட்சியால் அடையாளம் காட்டப்படும் எதிரி இருந்தார். ஒப்புதல் வாக்குமூலம் போலீசார் எதிரியை கேட்டு கேட்டு எதிரி சொல்லச் சொல்ல எழுதினார்கள். ஒப்புதல் வாக்குமூலத்தில் நான் கையெழுத்து செய்துவிட்டு நான் வந்துவிட்டேன் எதிரி கையெழுத்து செய்தாரா என எனக்கு தெரியாது. எதிரி நான் சொல்வது போல் எந்தவிதமான ஒப்புதல் வாக்குமூலமும் சொன்ன விதத்தில் கொடுக்கவில்லை என்றும் வழக்கு சொத்து எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றும் போலீசார் கேட்டுக் கொண்டதற்கிணங்க காவல் நிலையத்தில் தயாரித்து வைக்கப்பட்டிருந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் கையொப்பம் செய்தோம் என்றால் சரியல்ல. நான் போலீசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு இன்று 21.01.2026 தேதியில் கையெழுத்திட்டார்.

P V SANDILYAN
Digitally signed by P V SANDILYAN
Date: 2026.01.21 19:42:11 +0600

Additional District Judge(FTC),
Vellore